<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>
<u>காட்டுமன்னார்கோயில்.</u>

**S.T.C.175/2022**

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா. 1 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மஞ்சுநாத் ஷெட்டி | **ஊர்** | கர்நாடகா |
| தந்தை **பெயர்** | ராஜிவ ஷெட்டி | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **43** | **மாவட்டம்** | கடலூர் |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.08.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் கர்நாடகா மாநிலம் குந்தாபுரம் தாலுக்கா எனது சொந்த ஊர் ஆலூர். நான் குருங்குடி கிராமத்தில் முகாமிட்டு மீன்சுருட்டி முதல் சிதம்பரம் வரை NH 227 என்ற சாலையில் சாலை பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது நிறுவனத்தில் லாரி ஓட்டுநராக தற்காலிகமாக பணி புரிந்தார். ப.சா.2 தில்லை கனேஷ் என்பவரும் லாரி ஓட்டுனராக பணி புரிந்தார். எதிரி எனது நிறுவன வாகன ஓட்டுனரை திட்டவோ,வழிமறிக்கவோ, மிரட்டவோ இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். எனக்கு தமிழ் பேசத் தெரியும். எழுதப்படிக்க தெரியாது. மேற்படி புகாரை எனது நிறுவனத்தை சேர்ந்த ஒரு ஊழியர் மூலம் எழுதினேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நான் குருங்குடி கிராமத்தில் முகாமிட்டு மீன்சுருட்டி முதல் சிதம்பரம் வரை NH 227 என்ற சாலையில் சாலை பணி செய்து வருகிறேன் என்றும் எனது நிறுவனத்தில் லாரி ஓட்டுனராக இருக்கும் அன்பு செழியன் என்பவர் தினமும் தாமதமாக வேலைக்கு வந்ததால் நான் கண்டித்தேன் என்றும் அதனை மனத்தில் வைத்துக்கொண்டு முன் விரோதத்தில் 21.04.2022ந் தேதி மேற்படி எங்களது நிறுவன வாகனம் எரவாங்குடியில் இருந்து எள்ளேரிக்கு மண் ஏற்றி வந்தபோது காலை 7.30 மணிக்கு காட்டுமன்னார்கோயில் திலகா பேக்கிரி அருகே தில்லை கனேசன் என்பவர் ஓட்டி வந்த லாரியை வழிமறித்து தகாத வார்த்தையால் திட்டி, மிரட்டி சென்றார் என்றும் மேலும் எனது கம்பேனியின் மற்ற லாரிகளையும் வழிமறித்து சாலை போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தினார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.
சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.